உ

கடவுள் துணை.

குள்ளத்தாரா சிந்து.



பெரம்பூர்

ஆறுமுக முதலியா ரவர்களால்

சென்னை - சூளை,

ஸ்ரீகோபாலவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

குள்ளத்தாராசிந்து.

விநாயகர்-வணக்கம்.

விருத்தம்.

சிந்துசூழுலகிலுள்ளோர் திரௌபவங்கொள்ள வேண்டி, விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதிமாலைதன்னை, கந்தமார்சிந்தாய்கூறக்கரிமுகனுபயபொற்பூங், கொந்தலர்க்கழலைநாளுங் கூப்பியேபணிகுவாமால்.

நான்முகம்

சிந்து-கண்ணிகள்.

சித்திவிநாயகனே எகுள்ளத்தாரா நீ
சிந்தைதனிலேவகிப்பாய் எ-குள்ளத்தாரா
எஞலிக்கி தில்லாலே நீமுன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் எ-குள்ளத்தாரா. (க)

பாடலீசன் பொற்பதத்தை ஏ-குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா. (௨)

பேர்பெரியநாயகியை ஏ-குள்ளத்தாராநீ
பெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ-குள்ளத்தாரா

வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா (௪)

வள்ளிதெய்வசேனைபதம் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா (௫)

ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
யன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா (௬)

செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா (௭)

தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராநீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா (௮)

ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா-என்
தன்பின்வழியோடக்கிற் குள்ளத்தாரா (௯)

சந்த்ரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா-வதைச்
சாரவும்பொன்னேணியுண்டு குள்ளத்தாரா (௰)

பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா-வதைப்
பற்றப்பரிசுத்தனுண்டு குள்ளத்தாராநீ (௧௧)

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமுர்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா (௧௨)

ஏமனுமடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா (௧௩)

இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாரா-சொல்
இருவினையகன்றிடுவாய்குள்ளத்தாரா (௧௪)

கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா-நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா (௧௫)

தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-ரத்ன
சடைபில்லைதானுமுண்டு குள்ளத்தாரா (௧௬)

சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா-வதைச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா (௧௭)

காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-நல்ல
கம்பல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா (௧௮)

கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா-நற்
கொந்தளபம்பான்றோலையுண்டு குள்ளத்தாரா (௧௯)

கத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா-நல்ல
கனத்தசம்புலுமுண்டு குள்ளத்தாரா (௨௰)

நத்துமூக்குத்தியுண்டு குள்ளத்தாராநீ
நாணயமாய்பூட்டிக்கொள்ளக் குள்ளத்தாரா (௨௧)

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா-உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா (உஉ)

கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா (உங)

இடையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா
இசைந்தஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா (உச)

பாதசரந்தண்டையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா (உரு)

விரலிற்றரித்திடவுங் குள்ளத்தாரா-வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா (உசா)

இழையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா-உனக்கு
சித்திரவண்ணச்சேலையுண்டு குள்ளத்தாரா (உஎ)

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா-திகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா (உஅ)

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா-உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா (உகூ)

தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாரா-நீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா (ஙய)

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா-நீ
வேணதையநுபவிப்பாய் குள்ளக்தாரா (ஙக)

கைப்பிடிக்கக்கால்பிடிக்கக் குள்ளத்தாரா-சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா (௩௨)

ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா-உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா (௩௩)

தந்தநாற்காலியுண்டு குள்ளத்தாரா-நீ
சார்ந்துகொண்டிருப்பதற்குக் குள்ளத்தாரா (௩௪)

சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா-என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா (௩௫)

பொன்னுஞ்சப்பலகையுண்டு குள்ளத்தாரா-என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா (௩௬)

நன்னயமாய்பேசுதற்கு குள்ளத்தாரா-நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா (௩௭)

மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனரனேகருண்டு குள்ளத்தாரா (௩௮)

சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா (௩௯)

தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாரா-நீ
சிந்தைகளித்தாடவடி குள்ளத்தாரா (௪0)

பாக்குமரச்சாலையுண்டு குள்ளத்தாரா-நீ
பந்துவிளையாடவாடி குள்ளத்தாரா (௪௧)

கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாரா-நீ
கருதியதெல்லாந்தரக் குள்ளத்தாரா (சஉ)

கெடிலந்தியுமுண்டு குள்ளத்தாரா-வதின்
கிளர்கடுக்காலுமுண்டு குள்ளத்தாரா (சங)

உன்னைநம்பினானிருந்தால் குள்ளத்தாரா-இந்த
உலகம்பொருக்கலையே குள்ளத்தாரா (சச)

அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா (சரு)

கின்னைநேர்மொழியினளே குள்ளத்தாரா-நீ
கிருபைசெய்துவாராயோடி குள்ளத்தாரா (சசு)

மயில்போலுஞ்சாயலாளே குள்ளத்தாரா-என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா (சஎ)

அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா-உன்
னகமுமிரங்காதோடி குள்ளத்தாரா (சஅ)

அடைக்காயும்வெள்ளிலையுங் குள்ளத்தாராவெனக்
கருந்தவளியாயோடி குள்ளத்தாரா (சகூ)

வாசனைதிரவியங்கள் குள்ளத்தாராநீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா ()

சண்பகமலர்நிதமும் குள்ளத்தாரா-நீ
சம்பிரமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா ()

பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தாராநீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா (௫௨)

பாலும்நீரும்போலவடி குள்ளத்தாரா-நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா (௫௩)

மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா-இந்த
வையகமுள்ளவுமடி குள்ளத்தாரா (௫௪)

குள்ளத்தாராசிந்து முற்றிற்று.

